# புள்ளடியின் பலம்

தொகுதி 1 இதழ் 1 தேர்தல் ஆணைக்குழு 2017 ஒக்தோபர் – திசெம்பர்


## தொகுப்பாசிரியர் குறிப்பு

தேர்தல் ஆணைக்குழுவினால் அதன் குறிக்கோள்களையும், நோக்கங்களையும் அடைந்து கொள்வதற்காக 2017 – 2020 காலப்பகுதிற்கான மூலோபாயத்திட்டமொன்று தயாரிக்கப்பட்டது. தேர்தல் ஆணைக்குழுவின் அனைத்துத் தரப்புக்களுடனும் கலந்துரையாடல் மற்றும் விரிவுரை ,செயலமர்வுகளை நடாத்தி பெற்றுக் கொண்ட கருத்துக்கள் மற்றும் முன்மொழிவுகள் மற்றும் புதிய எண்ணக்கருக்கள் /புதிய கருத்துக்கள் ஊடாக இந்த மூலோபாயத்திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது.

இனம்காணப்பட்ட கவனயீர்புப் பகுதிகளின் (Trust Areas) கீழ் ஆணைக்குழுவின் பணிகளையும் மற்றும் செயற்பாடுகளையும் மையமாகக் கொண்டு காலாண்டு அடிப்படையில் சிறிய செய்திச் சஞ்சிகையொன்றை (News Letter) வெளியிடுவது பிரதான செயற்பாடொன்றாக குறிப்பிடப்பட்டுள்ளது. தேர்தல் ஆணைக்குழுவின் விடய அடிப்படைத் துறைகள் மற்றும் வருடாந்த பிரதான செயற்பாடுகள் ஆகியவற்றை பிரதானமாகக் கொண்டு இவ்வாறான காலாண்டு செய்திச் சஞ்சிகையொன்றை வெளியிடுவது ஆணைக்குழுவின் எதிர்பார்ப்பாகும்.

அதற்கமைய உலக சனநாயக தினமான செப்தெம்பர் மாதம் 15 ஆம் திகதி முதலாவது சஞ்சிகையை வெளியிடுவதற்கு ஆணைக்குழு தீர்மானித்தது.

உலக சனநாயக தினத்தையொட்டி ‘‘சனநாயத்தின் வெளிப்பாடு வாக்குரிமையாகும் – சர்வசன வாக்குரிமையைப் பாதுகாப்போம்’’ என்ற தொனிப்பொருளில் தேர்தல் ஆணைக்குழுவினால் இலங்கை முழுவதும் பொது மக்களை அறிவுறுத்தும் செயலமர்வுகள், விரிவுரைகள், வீதி நாடகங்கள், பதாகைகள், சுவரொட்டிகள் என்பவற்றைக் காட்சிப்படுத்தல் மற்றும் துண்டுப்பிரசுரங்களை விநியோகித்தல் போன்ற பல நிகழ்ச்சித்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டன. அந்த நிகழ்ச்சித்திட்டங்களின் புகைப்படங்கள் இந்த சஞ்சிகையில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

அரசியலமைப்பில் காணப்படுகின்ற மக்களின் அடிப்படை உரிமையொன்றான சனநாயம் மற்றும் சர்வசனவாக்குரிமையை பிரதான தலைப்பாகக் கொண்டு தேர்தல் ஆணைக்குழுவின் முதலாவது செய்திச் சஞ்சிகையான “புள்ளடியின் பலம்” இதழை வெளியிடுவதற்குக் கிடைத்தமை மகிழ்ச்சிக்குரிய விடயமாகும். வழமையான செய்திச் சஞ்சிகை வடிவமைப்பிலிருந்து வேறுபட்டு ஆணைக்குழுவிற்குரிய விடயத் தலைப்புக்களைப் பிரதான தலைப்புக்களாகக் கொண்டு இச் சஞ்சிகை வெளியிடப்படுகின்றது. இந்தப் பணிகளை வெற்றிகரமாக ஆற்றிக்கொள்வதற்கு முறையான அறிவுறுத்தல்களையும் மற்றும் வழிகாட்டல்களையும் வழங்கிய ஆணைக்குழுவின் தவிசாளர் திரு. மஹிந்த தேசப்பிரிய அதன் அங்கத்தவர்ளான சனாதிபதி சட்டத்தரணி திரு. நளின் ஜே. அபேசேகர மற்றும் பேராசிரியர் திரு. இரத்தின ஜீவன் எச் ஹூல், தேர்தல்கள் பணிப்பாளர் நாயகம், செயலாளர் உள்ளிட்ட அனைத்துப் பணியாட்குழுவினருக்கும் மற்றும் அச்சிடல் மற்றும் பக்க வடிவமைப்பு என்பவற்றை செய்து தந்த இலங்கை முதலீட்டு ஊக்குவிப்புச் சபையின் திரு. கே. டப்ளியூ ஜகத் சந்திரலால் த சில்வா ஆகியோருக்கு எமது நன்றிகள் உரித்தாகட்டும்.

இந்த சஞ்சிகையில் வெளியிடப்பட்டுள்ள ஆக்கங்களில் குறிப்பிட்டுள்ள விடயங்கள் தொடர்பாக அதனை எழுதிய எழுத்தாளர்களே பொறுப்புக் கூற வேண்டுமென்பதோடு ஆக்கங்களில் உள்ளடக்கப்பட்டுள்ள விடயங்கள் தேர்தல் ஆணைக்குழுவின் அல்லது தேர்தல் ஆணைக்குழுவின் உறுப்பினர்களின் கருத்துக்களல்ல.

## சனநாயகத்தின் வெளிப்பாடு வாக்குரிமையாகும். சனநாயத்தின் பெருவிழா வாக்கெடுப்பாகும்.

மனிதன் சுதந்திரமாகப் பிறக்கின்றான். சுதந்திரம் பிறப்பின் மூலம் கிடைக்கப்பெறுகின்ற ஓர் உரிமையாகும். அதே போன்று மனிதன் பிறப்பினால் எவருக்கும் கட்டுப்பட்டவனாகவோ அல்லது இரண்டாம் நிலையிலோ காணப்படவில்லை. மனிதன் பிறப்பிலேயே சமத்துவம் கொண்டவனாகக் காணப்படுகின்றான்.

நவீன உலகில் மனிதத்துவம் அல்லது மனித உரிமை, அதாவது மனித உரிமைகளின் அத்திவாரமாக அமைவது அந்த அடிப்படைகளாகும். அனைத்து உரிமைகளும் அனைவருக்கும் கிடைக்கப்பெறுவதன் மூலமே மனிதத்துவம் முழுமையடைகின்றது.




சமூகம் அராஜகம் கொண்டதாக காணப்பட முடியாது. சட்ட திட்ட முறைமையொன்றின் மூலம் ஒழுங்கமைப்பொன்றை தாபித்துக் கொள்ளவில்லையெனில் அவ்வாறான சமூகம் சிக்கல் கொண்டதாக மாற்றமடையும். அவ்வாறு நிகழுமாயின் மனிதத்துவத்தின் கொடையான உரிமைகள் இல்லாமற்போய்விடும்.

எமது பிறப்பினால் உரித்தாகின்ற சுதந்திரம் மற்றும் சமத்துவம் என்பவற்றை மதிக்கின்ற சமகால உலகில் காணப்படும் மிகச் சிறந்த சமூக அமைப்புக் கருவிதான் சனநாயகம். இச்சொல் மக்களால் மக்களை ஆளுதல் என்ற பொருள் தரும் கிரேக்க சொல்லில் இருந்தே தோற்றம் பெறுகின்றது. இருப்பினும் உலகில் காணப்பட்ட பண்டைய கலாச்சாரங்கள் பலவற்றில் மக்களால் மக்களை ஆளும் முறைமையின் இலட்சணங்கள் காணப்பட்டுள்ளன.

மக்களால் மக்களை ஆட்சி செய்தல் எண்ணக்கரு விருத்தியடைந்து இன்று நாம் பயன்படுத்துகின்ற பிரதிநிதித்துவ சனநாயகம் உருவாகியுள்ளது. அதற்குக் காரணம் இலட்சக்கணக்கான மக்கள் நேரடியாக சமூகத்தை ஒழுங்கமைத்துக் கொள்ளல், வேறு விதத்தில் குறிப்பிடுவதாயின் அரச நிருவாகத்தில் பங்குகொள்வதற்கான வேறு முறையொன்று இல்லாமையாகும்.

பிரதிநிதித்து சனநாயகம் என்பது உரிய காலப்பகுதியில் நடாத்தப்படுகின்ற தேர்தல்களின் போது வாக்குகளினால் குறித்த காலப்பகுத்திக்காக பிரதிநிதிகளை தேர்ந்தெடுத்துக் கொள்வதன் மூலம் அரசாங்கத்தை பேணிச்செல்வதாகும்.

வாக்கு மற்றும் சனநாயகம் என்பவற்றுக்கிடையில் நெருங்கிய தொடர்பொன்று காணப்படுகின்றது. ஒன்று இல்லாமல் மற்றையது இல்லை.

ஆரம்பகாலத்தில் அரசாட்சிகாகப் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்கும் தேர்தல்களின் போது, வாக்குரிமை தெரிவு செய்யப்பட்ட சில தரப்பினருக்கு மாத்திரமே காணப்பட்டது. உதாரணமாக பெரும்பாலான நாடுகளில் பெண்களுக்கு வாக்குரிமை பாரிய ஆர்ப்பாட்டங்களின் விளைவாகவே கிடைக்கப்பெற்றது.

சர்வசன வாக்குரிமை மூலம் தான் பிரதிநிதித்துவ சனநாயம் சாத்தியமடைகின்றது. அதாவது யார், எங்கிருந்து, எவ்வாறு என்பவற்றைக் கருத்திற் கொள்ளாது அனைத்துப் பிரசைகளுக்கும் ஒரு வாக்கு மாத்திரம் உரித்துள்ள முறையாகும். சர்வசன வாக்குரிமை என்பது அனைவரது விருப்பங்களையும் சமமான அடிப்படையில் வெளிப்படுத்துவதற்கான ஒரு கருவியாகும்.

ஏதேனும் சமூகமொன்றின் அங்கத்தவர்களில் எவரேனும் ஒருவர் எடுக்கும் தீர்மானம் அந்தச் சமூகத்தைப் பாதிக்கின்ற காரணத்தால், அச்சமூகத்தின் பங்குதாரர்களான அனைவரும் தீர்மானமெடுப்பதில் பங்குகொள்ளும் உரிமை சமமாகக் காணப்படுதல் வேண்டும். அதுதான் சர்வசன வாக்குரிமையின் பெறுமதியாகும்.

இருப்பினும் சர்வசன வாக்குரிமையின் உரிய பலம் மக்களுக்கு கிடைக்கவேண்டுமெனில் இன்னும் பல விடயங்கள் பூரணப்படுத்தப்படல் வேண்டும். சுருக்கமாகத் தேர்தல்கள், சுதந்திரமானதாகவும் மற்றும் நீதியானதாகவும் இருத்தல் வேண்டும் எனச் சொல்லப்படுவது அதன் காரணத்தினாலாகும்.

தேர்தல்கள் சுதந்திரமானதாகவும் மற்றும் நீதியானதாகவும் இருக்க வேண்டுமெனில் பிரதானமாக தமக்கு விருப்பமான பிரதிநிதியைத் தேர்ந்தெடுத்துக் கொள்வதற்குத் தேவையான தகவல்கள் பொதுமக்களுக்கு சுதந்திரமாவும் மற்றும் சமமாகவும் கிடைக்கப்பெறுதல் வேண்டும்.

தேர்தல் சந்தர்ப்பமொன்றின் போது ஊடகங்களின் வகிபாகம் முக்கியத்துவம் பெறுவது இந்த இடத்தில்தான். அறிவூட்டப்பட்ட பிரசையொருவரை உருவாக்குவதுதான் ஊடகங்களின் சனநாயக வகிபாகமாகும். பிரசைகள் அறிவூட்டப்படவில்லையெனில் சர்வசன வாக்குரிமை பயனின்றிப் போய்விடும்.

அதுமாத்திரமின்றி எந்தவொரு தேர்தலிலும் போட்டியிடுகின்ற அனைவருக்கும், அனைத்து அரசியல் கட்சிகளுக்கும் தமது தேர்தல் பிரச்சாரங்களுக்கு சமமான சந்தர்ப்பங்கள் இருக்க வேண்டும். சொத்து அல்லது அதிகார பலம் காரணமாக எவரேனும் வேட்பாளருக்கு அல்லது கட்சியொன்றுக்கு அதிக வாய்ப்புக்கள் இருக்கக்கூடாது. அப்படி இருந்தால் நாம் முன்னர் குறிப்பிட்ட சமத்துவம் இல்லாமல் போய்விடும். தேர்தல் சந்தர்ப்பமொன்றின் போது தேர்தல் ஆணைக்குழுவிற்கு இவ்வனைத்து விடயங்களையும் சமமாக வைத்துக் கொள்ள வேண்டிய பொறுப்பொன்று காணப்படுகின்றது. ஏனெனில் தேர்தல் நீதியானதாகவும் மற்றும் சுதந்திரமானதாகவும் காணப்படுவது இவ்விடயங்கள் சமமாக காணப்பட்டால் மாத்திரமேயாகும். அப்போதுதான் சர்வசன வாக்குரிமைக்கு உரிய இடம் கிடைக்கும்.

03 பக்கம்...



## சனநாயகத்தின் தூண்கள்

- மக்கள் இறைமை
- ஆட்சி செய்யப்படுகின்ற மக்களின் விருப்பின் பேரில் தாபிக்கப்படுகின்ற அரசு
- பெரும்பாண்மையோரின் ஆட்சி
- சிறுபான்மையினர் உரிமைகள்
- அடிப்படை உரிமைகளை அத்தாட்சிப் படுத்துதல்.
- நீதியான மற்றும் சுதந்திரமான தேர்தல்கள்
- சட்டத்தின் முன் சமத்துவம்
- சட்டம் முறையாக நடைமுறைப்படுத்தபடல்
- அரசு தொடர்பில் அரசியல் அமைப்பினால் விதிக்கப்படும் வரையறைகள்.
- சமூக, பொருளாதார மற்றும் அரசியல் பன்மைத்துவம் அல்லது பல்வகைமை
- சகிப்புத் தன்மை, பயன்பாட்டின், ஆதரவின் மற்றும் ஐக்கிய உடன்பாட்டின் விழுமியங்கள்.



## அடிப்படை மனித உரிமைகள்

- பேச்சுச் சுதந்திரம்
- கருத்து வெளியிடும் சுதந்திரம் மற்றும் பத்திரிகைச் சுதந்திரம்
- சமய சுதந்திரம்
- கூட்டங்களை நடாத்தும் மற்றும் சங்கங்களைத் தாபிக்கும் சுதந்திரம்.
- சட்டத்தினால் சமமான பாதுகாப்பு பெறும் உரிமை
- சட்டத்தின் முறையான செயற்பாடு மற்றும் நீதியான வழக்கு விசாரணையொன்றுக்கான உரிமை.

# பெரும்பான்மையானோரின் விருப்பம் சனநாயகமல்ல

கிரேக்க நகராட்சி அரசில் நகர மண்டபத்தில் ஒன்று கூடிய பிரசைகள் பொது விடயங்கள் தொடர்பில் தீர்மானங்களை மேற்கொண்டனர். இந்த ஆட்சிச் செயன்முறை சனநாயகம் என ஒரு காலப்பகுதியில் இனம் காணப்பட்டிருந்தது. அக்காலப்பகுதியில் காணப்பட்ட முறையிலான ஆட்சிமுறையொன்று இன்று (அதாவது இருபத்தோராம் நூ ற்றாண்டின் இரண்டாம் தசாப்பதில்) காணப்படுமாயின் நாம் அதனை சனநாயக ஆட்சி முறையென அழைப்போமா? தெளிவாக நாம் அவ்வாறு அழைக்க மாட்டோம். காரணம், கிரேக்க நகராட்சி அரசில் ஆட்சி அலுவல்கள் தொடர்பான தீர்மானங்களை எடுப்பதற்கு அதாவது , சனத்தொகையில் நூற்றுக்கு இருபது வரையான குடிமக்களே ஒன்று கூடி தீர்மானங்களை எடுத்தனர். பெண்கள், அடிமைகள், மற்றும் சில தொழிலாளர் வகுப்புக்களின் மக்கள் ஆகியோருக்கு ஆட்சிப் பணிகளில் கலந்துகொள்ளும் வாய்ப்புக்கள் இருக்கவில்லை.

நகராட்சி அரசிலிருந்து பல்வேறு மாற்றங்களுக்கு உட்பட்டுவந்த சனநாயத்திற்கு பல்வேறு காலப்பகுதிகளின் போது பல்வேறுவிதமான வரைவிலக்கணங்கள் வழங்கப்பட்டுள்ளன. பதினோழாம் நூற்றாண்டில் பிரித்தானியாவில் காணப்பட்ட முடியாட்சி முறைக்கு எதிராக மக்கள் பிரதிநிதிகள் மூலம் மேற்கொள்ளப்படுகின்ற ஆட்சி ,அதாவது பிரதிநிதித்துவ சனநாயகம் முறை தோற்றம் பெற்றது.

சனநாயம் தொடர்பான எமது கலந்துரையாடலை தொடர்ந்து முன்னெடுத்துச் செல்வதற்காக அதற்கு ஒரு பொருள்கோடலைச் செய்தல் வேண்டும். இங்கு நாம் பேராசிரியர் உல்ல டொன்க்விஸ்ட் அவர்களின் பொருள் கோடலை எடுத்துக்கொள்வோம். அவர் சனநாயக எண்ணக்கருவாகக் கொண்டிருப்பது, “ பொது விடயங்கள் தொடர்பில், அரசியல் சமத்துவத்தின் அடிப்படையில் மேற்கொள்ளப்படுகின்ற பொது மக்கள் ஆட்சி” என்பதாகும். அவர் பங்கேற்பு மற்றும் பிரதிநிதித்துவம் (வேறு விடயங்களுக்கிடையில்) சனநாயத்தின் இலட்சணங்களை இனம்கண்டுள்ளார். இந்தப் பொருள் கோடலுக்கமைய சனநாயத்தின் மைய அச்சு பொதுமக்கள் ஆட்சியாகும். இங்கு ஒரு முக்கியான எச்சரிக்கையொன்று காணப்படுகின்றது. அதாவது, சிறந்த சனநாயக ஆட்சியொன்றிக்காக பொதுமக்களை அரசியல் துறையுடன் ஒன்றிணைக்க வேண்டுமென்பதாகும். இங்கு அரசியல் என்பது பரந்த பொருளில் கையாளப்படுகின்றது. தேர்தல்கள் பணிகளில் ஈடுபடுதல் மாத்திரமின்றி வாக்களித்தல் மற்றும் பொதுவிடயங்கள் தொடர்பாக தமது கருத்துக்களைத் தெரிவித்தல் கூட அரசியல் செயற்பாடுகளாகும். தேர்தல் ஆணைக்குழு அடிக்கடி பயன்படுத்துகின்ற “ வாக்கு உங்கள் உரிமை” என்ற வாசகத்திற்கு விசேட பொருளொன்று காணப்படுவதும் அதன் காரணத்தினாலாகும். சிறந்த சனநாயக ஆட்சிக்காக பங்கேற்பும் மற்றும் பிரதிநிதித்துவமும் மிக முக்கியமாகும். அதற்காக சர்வசன வாக்குரிமை உரிய காலத்தினுள் நடாத்தப்பட வேண்டிய நீதியான மற்றும் சுதந்திரமான தேர்தல்கள், பல்கட்சி முறைமை மற்றும் ஒன்றிணையும் சுதந்திரம் என்பன காணப்படுதல் அவசியமாகும். பொது விடயங்கள் தொடர்பில் பொது மக்கள் ஆட்சியொன்று காணப்படுவதற்கு அவை மிகவும் முக்கியமாகும்.

தேர்தல் ஒன்றின் போது அரசியல் கட்சிகள் மற்றும் குழுக்கள் எதிர்வரும் சில வருடங்களுக்கு நாட்டின் அல்லது ஒரு பிரதேசத்தின் ஆட்சி அதிகாரத்தைப் பெற்றுக் கொள்ளும் எதிர்பார்ப்பில் போட்டியிடுகின்றன. தமது ஆட்சிக்கு அடிப்படையான கொள்கைகள் பிரகடனம் செய்யப்படும் பிரதிநிதிகளாகச் செயற்படுவதற்கு எதிர்பார்க்கின்ற நபர்கள் தேர்தலில் போட்டியிடுவார்கள். வாக்காளர்கள் வெளியிடப்பட்டுள்ள கொள்கைகள் மற்றும் வேட்பாளரின் தகைமை மற்றும் தகைமையீனங்கள், திறமைகள் என்பவற்றை ஆராய்ந்து பார்த்து ஆட்சி அலுவல்களுக்கான தமது பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுப்பார்கள். இது மேற்கூறிய பொதுமக்கள் ஆட்சியின் பிரதான ஒரு முறையாகும். இங்கு மக்கள் பிரதிநிதிகள் மூலம் மக்கள் ஆட்சியில் பங்குகொள்வார்கள்.

தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் அவர்களுக்கு வாக்களித்த மற்றும் வாக்களிக்காத அனைவர் சார்பாகவும் ஆட்சிப் பணிகளில் ஈடுபடுவார்கள். மக்களாட்சி என்பது ஒரு தரப்பினரின் ஆட்சியல்ல மொத்த மக்களினதும் ஆட்சியாகும். உண்மையான சனநாயக ஆட்சியினுள் அது வெறுமனே பெரும்பான்மையானோரின் நலனுக்காக மாத்திரம் மேற்கொள்ளப்படுகின்ற நிருவாகமொன்றல்ல. மக்கள் சமூகத்தில் பல்வேறுபட்ட பிரிவினைகள் காணப்படுமிடத்து அவை தொடர்பாக உரிய அவதானத்தைச் செலுத்தாது ஏதேனும் மக்கள் பிரிவுகளின் நலனைக் கருத்திற்கொள்ளாது ஒரு மக்கள் பிரிவின் நம்பிக்கை மற்றும் ஆதரவை மாத்திரம் நோக்கமாகக் கொண்டு ஆட்சிப் பணிகளை மேற்கொண்டு சென்றால் அங்கு சனநாயகம் காணப்படமாட்டாது.

1994 ஆம் ஆண்டுக்கு முன்னர் ஐம்பது ஆண்டுகள் வரையான காலமொன்று தென்னாபிரிக்காவில் காணப்பட்ட நிறபேதம் கொண்ட ஆட்சிமுறை இதற்கு நல்லதோர் உதாரணமாகும். அங்கு கறுப்பின மக்கள் பிரிவினரை மிகவும் அடக்கு முறைக்கு உட்படுத்துகின்ற சட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டன. வெள்ளை இனத்தவர்கள் வாழுகின்ற பிரதேசங்களிலிருந்து வெளியேறி வாழுமாறு அவர்கள் பலவந்தப்படுத்தப்பட்டனர். கறுப்பு மற்றும் வெள்ளை இனத்தவர்களுக்கிடையில் திருமணம் செய்வது தடைசெய்யப்பட்டது. அவர்களிடையே சமூக ஒற்றுமை ஏற்படக்கூடிய சந்தர்ப்பங்கள் இல்லாதொழிக்கப்பட்டன. இவையனைத்தும் சட்டக் கட்டமைப்புக்குள்ளேயே மேற்கொள்ளப்படடன. கறுப்பினத்தவர்களுக்கு பாதகமான ஒன்றாகக் காணப்பட்டமையினால் அந்த ஆட்சிமுறை சனநாயகமற்றதாகக் காணப்பட்டது. சமூகத்தின் ஒரு தரப்பினரின் உரிமைகளைப் பறிக்கின்ற அவர்களுக்கு பாகுபாடு காட்டுகின்ற ஆட்சி முறை ( ஆட்சியாளர்கள் சட்டரீதியான ஒரு தேர்தல் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பினும்) ஒரு போதும் அது சனநாயக ஆட்சியாக மாட்டாது.

பெரும்பான்மை விருப்பத்தின் அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்பட்ட மாத்திரத்தில் பெரும்பான்மை பிரதிநிதிகளின் இணக்கப்பட்டோடு நடைமுறைப்படுத்தப்பட்ட மாத்திரத்தில் அதனை சனநாயக ஆட்சியெனக் கூற முடியாது. அது சிறுபான்மை மக்கள் பிரிவினருக்கு பாதகமான விதத்தில் நடைமுறைப்படுத்தப்படுமாயின் அங்கு காணப்படுவது பெரும்பான்மையினரின் அடக்குமுறை ஆட்சியாகும். அல்லது பெரும்பான்மையினரின் மக்கள் ஒடுக்குமுறை ஆட்சிமுறையாகும். சனநாயக ஆட்சிமுறையொன்று ஒரு போதும் சிறுபான்மை மக்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் ஆட்சி முறையாக இருக்கமாட்டாது. தீர்மானமெடுக்கும் செயற்பாட்டின் போது ஆளும் கட்சி சிறுபான்மை மக்கள் தொடர்பாக எவ்வளவு தூரம் சிந்திக்கவில்லையோ, கருத்திற்கொள்ளவில்லையோ அவ்வளவு தூரம் அந்த ஆட்சி சனநாயத்திற்கு எதிரானதாகும்.

மக்கள் சமூகத்தில் பல்வேறுபட்ட பிரிவினைகள் உள்ள போது இந்நிலைமை தொடர்பாக விசேட கவனம் செலுத்த வேண்டியிருப்பது, அவ்வாறு கவனம் செலுத்தாது விடின் சிறுபான்மை மக்களின் எதிர்ச் செயற்பாடுகள் சனநாயகத்திற்கு எதிரான ஒன்றாகப் பரவக் கூடிய ஆபத்து காணப்படுகின்ற காரணத்தினால் ஆகும். ஆளும் கட்சியை சிறுபான்மை தொடர்பாக சிந்திப்பதற்கு தூண்டக் கூடிய மிகச்சிறந்த வழி சிறுபான்மையினரின் உத்தியோகபூர்வ பிரதிநிதித்துவத்தை விரிவுபடுத்துவதாகும். இதனைப் பல வழிகளில் மேற்கொள்ள முடியும். சம்ஷ்டி முறை போன்ற அதிகாரப்பகிர்வு முறைமை, பல் அங்கத்தினர் தொகுதிகளைத் தாபித்தல், சிறுபான்மையினருக்காக நியமனம் செய்யப்பட்ட உறுப்பினர் பதவிகளை வழங்குதல், உயர்பீட உறுப்பினர் சபையொன்றைத் தாபிப்பதன் மூலம் சிறுபான்மை மக்கள் பிரிவினருக்கு அதிக பிரதிநிதித்துவத்தை வழங்குதல் போன்ற வழிகள் இதற்காகப் பயன்படுத்தப்பட்டுள்ளன. இருப்பினும் இறுதியாக இந்தப் பிரச்சினைக்கு தீர்வினை சிறுபான்மை மக்களை மதிக்கின்ற பெரும்பான்மை மக்கள் வாழுகின்ற ஒரு கலாச்சாரம் ஒன்றினுள் மாத்திரமேயாகும் காணமுடியும்.

– சட்டத்தரணி பிரசன்ன த சொய்சா












01 பக்கத் தொடர்ச்சி

## சனநாயகத்தின் வெளிப்பாடு....

வாக்களித்தல் என்பது வெறுமனே பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுப்பதற்கு வரையறுக்கப்பட்ட ஒரு செயற்பாடு மாத்திரமன்றி அது ஒரு கலாச்சாரமாக மாற்றமடைய வேண்டும். அதாவது அரசாட்சி தொடர்பான தமது கருத்துக்களைத் தெரிவிப்பதற்கு பொதுமக்களுக்குள்ள உரிமையொன்றென அது சமூகமயப்படுத்தப்பட வேண்டும்.

சனநாயம் என்பது மனிதத்துத்தை பாதுகாக்கின்ற ஒரு கருவியாகும். அனைத்து மனித உரிமைகளையும் உள்ளடக்கிய ஒரு நோக்கு. ஒரு கலாச்சாரம் ஆகும்.

இவ்வாறு சனநாயகம் மற்றும் சர்சன வாக்குரிமை என்பவற்றால் தமது கருத்துக்களுக்கும் ஒரு பெறுமதி உண்டென்ற உணர்வு பொதுமக்களிடத்தல் ஏற்படுகின்றது. எமது உரிமைகளைப் பாதுகாப்பதற்கும் மற்றும் வாழ்கையைச் சிறப்புறச் செய்துகொள்வதற்கும் சந்தர்பமொன்று இதன் மூலம் எமக்கு ஏற்படுத்திக் கொடுக்கப்படுகின்றது.

சனநாயகத்தைப் பாதுகாப்பதற்கு சர்வசன வாக்குரிமை அவசியமாகும். சனநாயம் இல்லையெனில் சர்சன வாக்குரிமை கிடைக்கமாட்டாது. சரியாக ஒரே கயிற்றன் இரண்டு திரிகள் போன்றன இவையிரண்டும்.

எனவே இவ்விரண்டு திரிகளும் எமக்கு அவசியமாகும். அதனால்தான் சனநாயத்தின் வெளிப்பாடு வாக்குரிமையாகும், சனநாயத்தின் பெருவிழா தேரத்தலாகும் எனச் சொல்கின்றோம்.

**உலக சனநாயக தினத்தைக் கொண்டாடுவோம்.**

**சர்வசன வாக்குரிமையைப் பாதுகாப்போம்.**

– அசோக்க ஜயவர்த்தன

## பெண்கள் பிரதிநிதித்தும் மற்றும் தொடர்புடைய உலகின் முதலாவது பெண் பாராளுமன்ற உறுப்பினர்கள்



புதிய தேர்தல் முறைமையொன்று தொடர்பான பேச்சுக்களைத் தொடர்ந்து மக்கள் பிரதிநிதிகளிடத்தில் பெண்கள் பிரதிநிதித்துவம் தொடர்பான பேச்சுக்களும் ஆரம்பமாகின. பாராளுமன்றம் மற்றும் ஏனைய தேர்தல்கள் மூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்ற பொதுமக்கள் பிரதிநிதிகள் நிறுவனங்களில் பெண்கள் பிரதிநிதித்துவம் குறைந்த ஒரு நாடு இலங்கையாகும். 2015 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் தேர்தலின் பின்னர் தேர்ந்தெடுக்கப்பட்ட பாராளுமன்றத்தில் 225 மொத்த உறுப்பினர்களில் 13 பேர் பெண்கள் என்பதோடு இது நூற்றுக்கு 5.8 சதவீதமாகும். இதன் படி இலங்கை பெண்கள் பிரதிநிதித்துவத்தில் 187 நாடுகளுக்கிடையில் 178 ஆம் இடத்தில் உள்ளது.

இங்கு பாதகமான விடயம் யாதெனில் சனத்தொகையில் பெரும்பான்மையான பெண்களில் நாட்டின் சட்டங்கள் இயற்றப்படுகின்ற பாராளுமன்றத்தில் பிரதிநிதித்துவம் செய்யாமையாகும். குறிப்பாகப் பெண்களுக்குத் தாக்கம் செலுத்தும் விடயங்கள் தொடர்பான சட்டங்கள் கூட ஆண்களினாலேயே நிறைவேற்றப்படுக்கின்றது. இது ஒரு வகையில் கவலைக்குரிய விடயமாகும்.

உலகில் முதற்தடவையாக பெண் பாராளுமன்ற உறுப்பினர்கள் 1907 ஆம் ஆண்டு பின்லாந்திலேயே தெரிவு செய்யப்பட்டனர். இக்காலப்பகுதியில் பின்லாந்து ரஷ்யாவின் நிருவாகத்தின் கீழ் காணப்பட்டதோடு, அந்நாடு சட்டரீதியான ஒரு குடியேற்றப் பிரதேசமாகக் கருதப்பட்டது. அதற்குத் தனியான பாராளுமன்றமொன்றும் காணப்பட்டது. 1906 ஆம் ஆண்டில் பின்லாந்து சர்வசன வாக்குரிமையை தனது நாட்டுமக்களுக்கு வழங்கிய முதலாவது ஐரோப்பிய நாடாக விளங்கியதோடு பெண்கள் பின்லாந்து பாராளுமன்றத்திற்குத் தெரிவு செய்யப்படுவதற்கான சந்தர்ப்பமும் வழங்கப்பட்டது. இந்தப் புதிய தேர்தல் சட்டத்தின் கீழ் முதலாவது தேர்தல் 1907 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 15 மற்றும் 16 ஆம் திகதிகளில் நடாத்தப்பட்டது.

இந்தத் தேர்தலில் 200 பாராளுமன்ற ஆசனங்களில் 80 ஆசனங்கள் சமூக சனநாயகக் கட்சியினால் வெல்லப்பட்டன. பின்னிஸ் கட்சி (Finnish Party) 59 ஆசனங்களையும், இளைஞர் பின்னிஸ் கட்சி (Young Finns' Party) 26 ஆசனங்களையும், சுவிடன் மக்கள் கட்சி (Swedish People's Party) 24 ஆசனங்களையும், விவசாயிகள் லீக் (Agrarian League) 9 ஆசனங்களையும் மற்றும் கிறிஸ்தவ தொழிலாளர் கட்சி (Christian Workers' Party) 2 ஆசனங்களையும் பெற்றுக் கொண்டன. இங்கு சுவிடன் மக்கள் கட்சி என்பது பின்லாந்தில் வாழும் சுவிடன் மக்களின் தேவைகளுக்காகத் தோற்றுவிக்கப்பட்ட ஒரு கட்சியாகும்.

இந்தத் தேர்தலில் தேர்ந்தெடுக்கப்பட்ட 200 உறுப்பினர்களில் 19 பேர் பெண் உறுப்பினர்களாவர். சதவீதமாகப் பார்க்கும் போது 9.5 சதவீதமாகும். அதாவது 1907 ஆம் ஆண்டில் பின்லாந்து பாராளுமன்றத்தில் பெண்கள் பிரதிநிதித்துவம், 2015 ஆம் ஆண்டில் இலங்கைப் பாராளுமன்றத்தில் பெண்கள் பிரதிநிதித்துவத்தை விடவும் கணிசமானளவு உயர்ந்த மட்டத்தில் காணப்பட்டது.

இங்கு மிகவும் முக்கியமான அடுத்த விடயம் யாதெனில் இந்தப் பெண்கள் பிரதிநிதித்துவம் ஒரு கட்சிக்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்டிருக்காமையாகும். சமூக சனநாயகக் கட்சியிலிருந்து ஒன்பது பெண் உறுப்பினர்களும், பின்னிஸ் கட்சியிலிருந்து ஏழு பெண் உறுப்பினர்களும், இளைஞர் பின்னிஸ் கட்சியிலிருந்து இரண்டு பெண் உறுப்பினர்களும் மற்றும் சுவிடன் மக்கள் கட்சியிலிருந்து ஒரு பெண் உறுப்பினரும் என்றவாறு தெரிவுசெய்யப்பட்டனர். அதில் மிகவும் வயது குறைந்த உறுப்பினராக சமூக சனநாயகக் கட்சியின் இடா ஆலே – டெல்யோ (Ida Aalle Teljo) தெரிவு செய்யப்பட்டார். பாராளுமன்றத்திற்கு தெரிவு செய்யப்படும் போது அவரின் வயது 22 ஆகும்.

பின்லாந்து பாராளுமன்றத்தில் இன்றும் 200 ஆசனங்களே காணப்படுகின்றது. 2015 ஆம் ஆண்டு நடாத்தப்பட்ட பின்லாந்து பாராளுமன்றத்திற்குத் தெரிவு செய்யப்பட்ட 200 உறுப்பினர்களில் 84 பேர் பெண் உறுப்பினர்களாகும். அது நூற்றுக்கு 42 சதவீதமாகுமென்பதோடு பெண்கள் பிரதிநிதித்துவத்தில் பின்லாந்துப் பாரளுமன்றம் உலகில் எட்டாவது இடத்தில் காணப்படுகின்றது.

– சாமர சுமனபால











# சனநாயகம்

தேர்தல் ஆணைக்குழுவினால் சனநாயகம் மற்றும் வாக்குரிமை என்பவற்றின் பெறுமதி தொடர்பாக பாடசாலை மாணவ சமூகத்தை அறிவுறுத்தும் நிகழ்ச்சித் திட்டங்களின் போது மாணவர் பாராளுமன்ற பிரதிநிதிகள் கேட்கின்ற பொதுவான வினாக்கள் தொடர்பாக கவனம் செலுத்தும் போது உலக சனநாயக தினம் கொண்டாடப்படவுள்ள செப்தெம்பர் 15 ஆம் திகதி சனநாயகத்தை அறிந்து கொள்ளல் தொடர்பான ஒரு குறிப்பை எழுதுவது பொருத்தமானதாகும். சனநாயகம் என்பது ஆங்கிலத்தில் Democracy என அழைக்கப்படுகின்றது. இது கிரேக்க சொல்லில் இருந்து தோற்றம் பெற்றுள்ளதோடு அது Demo– மக்கள், Kratos – ஆட்சி என்பதாகும். சனநாயம் போன்று விவாதிக்கப்பட்ட ஒரு சிந்தனை மிகவும் அரிதாகும். அது தொடர்பாக வழங்கப்பட்டுள்ள பல்வேறு பொருள்கோடல்களுக்கும் குறைவில்லை. அரசியல் கோட்பாட்டாளர்கள் தொடக்கம் பல்வேறு கல்வியியலாளர்களின் கருத்துக்கள் சனநாயகத்தின் பொருள் கோடலை விட அதன் தன்மையை அறிந்து கொள்வதற்கு மேற்கொள்ளப்பட்ட முயற்சியொன்றாகக் கருத முடியும். **1863 ஆம் ஆண்டு அமெரிக்க சனாதிபதி ஆபிரகாம் இலிங்கன் கெட்ஸ்பேர்க நகரில் சனநாயகம் பற்றி விளக்கும் போது "மக்களால் மக்களுக்கான மக்களாட்சி முறை" எனக் குறிப்பிட்டுள்ளார். ஸ்பானிய நாட்டவரான மிகேல் த ஸ்வான்ட் "சுதந்திரம் என்பது மனிதன் சுவனத்திலிருந்து பெற்றுக்கொண்ட ஒரு முதுசம் எனவும்" "அனைத்து சட்டரீதியான ஆட்சியும் நிலைத்திருப்பது மக்களின் விருப்பத்திலேயே" என ஜோன்லொக் (1680) அவர்களும் தெரிவித்துள்ளனர்.**

சனநாயக ஆட்சிமுறை காணப்படுவதாகத் தெரிவிக்கின்ற நாடுகளின் அரசியல் அமைப்புகளைப் பார்க்கின்ற போது அந்த வரைவிலக்கணங்களுக்கும் யதார்த்தமான செயற்பாடுகளுக்கும் இடையில் பாரியவேறுபாடுகள் காணப்படுகின்றன. ஆபிரிக்க கண்டத்தில் சில நாடுகள் ,இலத்தீன் அமேரிக்க நாடுகள் மற்றும் ஆசிய நாடுகள் போன்றன ஒன்றுகொன்று முரண்பட்ட பல்வேறு அரசியல் அமைப்புக்களைக் கொண்டுள்ள நாடுகள் கூட தமது நாடுகளில் சனநாயக ஆட்சிமுறை காணப்படுவதாகத் தெரிவிக்கின்றன. சோசலிசவாத ஆட்சி முறையின் தன்மைகளைக் கோண்டுள்ள நாடுகள் கூட அந்த ஆட்சி முறை சனநாயகத் தன்மை கொண்ட ஆட்சி முறையென்றே தெரிவிக்கின்றன. இதிலிருந்து "சனநாயக" ஆட்சி முறை அனைவராலும் நிராகரிக்க முடியாத சிறந்த அரசியல் உதாரணமாக மாறியுள்ளதென்பது தெளிவாகின்றது. சனநாயகம் பலவீனமான ஆட்சி முறையொன்றாக இத்தாலியின் பொனிட்டோ முசொலினி அவர்களை முதன்மையாகக் கொண்ட பாசிசவாதிகளால் மாத்திரமே நிராகரிக்கப்பட்டது. சோசலிச இயல்பு கொண்ட நாடுகளில் சுதந்திரம் மற்றும் சுயாதீன ஊடகப் பாவனை இல்லாமை காரணமாக அவை சனநாயகம் அற்றவையென மேற்கத்தேய தாராண்மை வாதிகள் தெரிவிப்பதோடு, மக்களின் உதவியோடு விசேட ஆட்சியை மேற்கொள்வதன் காரணமாக சோசலிச நாடுகளில் அவர்களும் சனநாயகவாதிகள் என்று சொல்லிக் கொள்வதற்கான உரிமை காணப்படுவதாக பேராசிரியர் பேணாட் கிங் தெரிவித்துள்ளார். "சர்வதிகார சனநாயகம் Totalitarian Democracy காணப்பட முடியுமெனவும் பேராசிரியர் பேணாட் கிங் மேலும் தெரிவித்துள்ளார். அப்போதைய சாம்பியாவின் சனாதிபதி கெனத் கவுன்டா மற்றும் தன்சானியாவின் ஜூலியஸ் நியோரோ ஆகியோரின் ஆட்சி முறை இதற்கு உதாரணமாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

சனநாயகத்தின் தோற்றுவாய் மற்றும் அதன் பிரவாகம் பற்றி ஆராயும் போது முக்கியமான பல சந்தர்ப்பங்களை இனம்கண்டு கொள்ள முடியும். அதில் கிரேக்க சனநாயகம் பிரதானமாகும்.

# கிரேக்க சனநாயகம்



கி.மு 4 – 5ஆம் நூற்றாண்டுகளில் கிரேக்கத்தில் காணப்பட்ட நகராட்சி அரசினுள் (polis) சனநாயகத்தின் அடிப்படை மூலங்களைக் காணமுடியும். கிரேக்கத்தில் காணப்பட்ட 158 அரசியல் அமைப்புக்கள் தொடர்பாக அரிஸ்டோட்டில் ஆராய்சிகள் மேற்கொண்டதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. அனைத்து நகராட்சி அரசுகளும் சனநாயகம் கொண்டதாக காணப்படவில்லலையென்பதோடு சனநாயக முறையின் பிரசித்தமான முன்மாதிரி நாடாக கருதப்படுவது எதென்ஸ் ஆகும். எதென்ஸ் இராணுவத் தளபதியான பெரிக்லஸ் (Pericles) அவர்களின் உரையொன்றுக்கமைய அந்த மூலாதாரங்கள் கட்டியெழுப்பப்பட்டுள்ளதோடு எதென்ஸ் அரசு மற்றும் ஸ்பாட்டா அரசு என்பன யுத்தத்தில் ஈடுபட்ட போது எதென்ஸில் மரணமடைந்த சிப்பாய்களின் வீரத்தை நினைவு கூறுவதற்காக நடாத்தப்பட்ட வைபவத்தில் இந்த உரையை நிகழ்த்தியுள்ளார். எதென்ஸில் நேரடி சனநாயகம் தொடர்பாக பேசப்பட்ட போதும், அங்கு சகலருக்கும் அச்சந்தர்ப்பம் கிடைக்கவில்லை. பெரும்பான்மையான அடிமைகள் ,குழந்தைகள் மற்றும் பெண்கள் ,வெளிநாட்டவர்கள் போன்றோருக்கு வாக்குரிமை இருக்கவில்லை. ஏனைய பிரசைகளுக்கு வருடாந்தம் நியமனம் செய்யப்படுகின்ற ஏதேனும் ஒரு பதவிக்கு தெரிவு செய்யப்பட முடியுமென்பதோடு, அலுவலர்கள் தமது செயற்பாடுகள் தொடர்பாக பிரசைகளுக்கு பதிலளிப்பதற்கு கடப்பாடுடையவர்கள். அலுவலர்களுக்கெதிரான குற்றம் சாட்டுவதற்கு பிரசைகளுக்கு சாத்தியம் காணப்பட்டதோடு, எதென்ஸ் நீதிமன்றத்தில் அவை விசாரிக்கப்பட்டு குற்றவாளிகளுக்குத் தண்டனைகள் வழங்கப்பட்டது. சோக்கிரடீஸ் இளைஞர்களின் உள்ளங்களை மாசுபடுத்தியதாக குற்றம் சுமத்தி மரண தண்டனை இந்த அடிப்படையிலேயே வழங்கப்பட்டது. நீதிமன்றங்கள் சாதாரன மக்களைக் கொண்டதாகவே காணப்பட்டன. கிரேக்க நகராட்சி அரசில் முதன்மைத்துவம் நபர்களுக்கின்றி நகர அரசுக்கே வழங்கப்பட்டது. நகராட்சி அரசு அரசியல் அமைப்பொன்றாக மாத்திரமின்றி கலாச்சாரம், சமயம் உள்ளிட்ட அனைத்து சமூகத் தொடர்புகளையும் வழிநடாத்தும் ஒரு பரந்த அமைப்பாகக் காணப்பட்டது. அரசுக்கு வெளியில் வாழ முடியுமென ஒருவர் எண்ணுவாராயின் அவர் அசுரனாக அல்லது கடவுளாக இருக்க வேண்டுமென அரிஸ்டோட்டில் குறிப்பிட்டார். இது இன்றைய பொருளில் சனநாயகத்தை விட பாசிசவாதத்திற்குச் நெருங்கிய கருத்தாகும். நவீன சனநாயகத்தின் கருத்து அரச அதிகாரத்திலிருந்து நபர்களை விடுவித்துக் கொள்வதாகும். அதிலிருந்து விடுபடுமளவுக்கு அவர் சுதந்திரமான மற்றும் சுயாதீனமான ஒரு நபர் எனக் கருதப்படுகின்றது. சனநாயகத்தின் மூலவேர் கிரேக்க நகராட்சியினுள் ஏற்பட்ட போதும், சமகால சனநாயகத்திற்கும் அதற்கும் தொடர்புபொன்று கிடையாது. இன்று அரசுகள் அளவிலும் மற்றும் சனத்தொகையிலும் அதிகரித்த தேசிய அரசுகளாக மாற்றமடைந்துள்ளன.

# எதென்ஸ் சனநாயகம்

எதென்ஸ் சனநாயகம் – இதன் கீழ் ஆட்சி அலுவல்களில் பங்குகொள்வதற்கு அனைத்துப் பிரசைகளுக்கும் உரிமை கிட்டியது. வாக்களித்து தேர்தலின் போது பிரதிநிதிகளைத் தெரிவு செய்து கொள்வது மாத்திரமின்றி அரசில் அல்லது நிறுவனமொன்றில் அங்கத்துவம் பெற்று அதன் அன்றாட நிருவாக அலுவல்களில் ஈடுபடுவதற்கும் பிரசைகளுக்கு முடிந்தது. அவர்களுக்கு அச்சந்தர்ப்பம் வசதி படைத்தவர்களாகவும் மற்றும் பிரபுக்களாகவும் இருந்தமையின் காரணமாக கிடைக்கப்பெற்றதாக சில அரசியல் விமர்சகர்கள் தெரிவிப்பதோடு, பிளேட்டோ என்ற அரசியல் சிந்தனையாளர், சலவைத் தொழிலாளிகள், பாதணி தைப்போர், தச்சு வேலை செய்வோர், விவசாயிகள், கொல்லர்கள் மற்றும் சிறு வியாபாரங்களில் ஈடுபடுவோர் குடிமக்கள் சபையில் காணப்பட்டதாக குறிப்பிட்டுள்ளார். எதேன்ஸ் ஆட்சி முறையில் அறிவியல் சார்ந்த அம்சம் யாதெனில், குடிமக்கள் சபை, நிறைவேற்று சபை மற்றும் நீதிமன்ற சபை என்ற சபைகள் காணப்பட்டமையாகும். குடிமக்கள் சபை ஒரு வருடத்தினுள் பத்து அமர்வுகளையும் மற்றும் நாற்பது கூட்டத் தொடர்களையும் நடாத்த வேண்டுமென்பதோடு, 3000 – 6000 வரையான பிரசைகள் கலந்து கொண்டதோடு, இச்சபை மூலம் ஆட்சி அலுவல்களை மேற்கொண்ட அலுவலர்களின் செயற்பாடுகள் பரிசீலனைக்குட்படுத்தப்பட்டன. இதில் 30 வயதிற்கு மேற்பட்ட பிரசைகளுக்கு மாத்திரம் கலந்து கொள்ள முடிந்தது. நிறைவேற்று சபை 500 அங்கத்தவர்களை கொண்டதோடு, இதன் பதவிக்காலம் இரண்டு வருடங்களாகும். இச்சபை தினமும் ஒன்று கூடியதோடு, அன்றாட அலுவல்களை மேற்கொள்வதற்கு 50 பேர் கொண்ட ஒரு குழு மற்றும் வாக்கெடுப்பின் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவரையும் உள்ளடக்கியிருந்தது. குடிமக்கள் சபையின் நிகழ்ச்சி நிரல் நிறைவேற்று சபையால் தயாரிக்கப்பட்டது. குடிமக்களிலிருந்து வருடாந்தம் தேர்ந்தெடுக்கப்பட்ட 6000 பிரசைகளை உள்ளடக்கிய நீதிமன்ற சபை பல சபைகளை கொண்டிருந்தது. ஒவ்வொரு சபைகளிலும் பெரும்பான்மை வாக்குகளால் தீர்மானங்கள் எடுக்கப்பட்டன. சோக்ரெட்டிஸ் என்ற கல்வியியலாளர் இளைஞர்களின் உள்ளத்தை மாசுபடுத்திய குற்றச்சாட்டிற்காக அவருக்கு இந்த நீதிமன்ற சபையொன்றினால் பெரும்பான்மையானோரின் தீர்மானத்தின் அடிப்படையில் மரண தண்டனை வழங்கப்பட்டது. நீதிமன்ற சபைகளும் சாதாரண குடிமக்களைக் கொண்ட ஒன்றாக காணப்பட்டன.

இதற்கு மேலதிகமாக குடிமக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட 10 இராணுவ தளபதிகளை உள்ளடக்கிய சபையொன்றும் காணப்பட்டது.



அவசர சந்தர்ப்பமொன்றின் போது அனைத்து பிரசைகளும் ஆயுதம் ஏந்துவதனூடாக இராணுவங்கள் உருவாக்கப்பட்டன. பெரிக்கிளிஸ் 10 ஆண்டுகள் எதென்ஸ் நாட்டின் இராணுவ தளபதியாகப் பதவி வகித்தார்.









# பண்டய இந்திய சனநாயகம்



கி.மு 5-4 ஆம் நூற்றாண்டுகளில் கிரேக்கத்தின் நகராட்சி முறைக்கு சமமான கூட்டரசாங்க முறையொன்று இந்தியாவில் காணப்பட்டது. பௌத்த காலத்தில் இந்தியாவில் சாக்கியர், மல்லர், வஜ்ஜியர் குடியேற்றங்களில் விருத்தியடைந்த சனநாயக ஆட்சி முறையொன்று காணப்பட்டதாக பிரீஸ் டேவிட் சுட்டிக் காட்டுகின்றார். கிரேக்கத்தின் மிகப் பெரிய நகர அரசான ஸ்பாடா (3360 ச.கீ.) விஸ்தீரனம் கொண்டதோடு, எதென்ஸ் நகரம் 1060 ச.கீ கொண்டதாகும். இந்தியாவின் சாக்கியர் குடியேற்றம் அதற்கு சமமான விஸ்தீரனம் கொண்டதாகும். சாக்கிய ஆட்சியில் பெரும்பாண்மை வாக்குகளால் தெரிவு செய்யப்பட்ட "சங்க முக்கிய" என்ற தலைவரொருவரும் காணப்பட்டதோடு, சபையின் பணிகளை மேற்கொள்வதற்கு எழுதுநரொருவரும் காணப்பட்டார். குறைநிறைவெண் தொடர்பாக விஷேட கவனம் செலுத்தப்பட்டதோடு, சபையின் எண்ணிக்கை அதிகரித்தமை காரணமாக அன்றாட அலுவல்களை மேற்கொள்வதற்கு 5- 6 பிரசைகளைக் கொண்ட குழுக்களும் காணப்பட்டன. இது முழுமையாக குடிமக்கள் சபைக்கு கட்டுப்பட்டதாகக் காணப்பட்டது. இராணுவத்திற்குக் கூட குடிமக்கள் சபையினூடாகவே தெரிவுகள் மேற்கொள்ளப்பட்டன. இன்று காணப்படுகின்ற பாராளுமன்ற முறையின் மூல அடிப்படைகள் இந்தியாவில் காணப்பட்ட பௌத்தர்களின் நியாய சபைகளிலும் காணப்பட்டமை பெரும்பாலானோருக்கு ஆச்சரியமாக இருக்க முடியுமென சர்டெலன்ட் பிரபு "இந்தியாவின் மரபுரிமை" என்ற நூலில் குறிப்பிட்டுள்ளார்.

# புரட்டஸ்தாந்து சீர்திருத்தம் மற்றும் தாராண்மை வாதம்

14, 15, 16 ஆம் நூற்றாண்டுகளில் ஐரோப்பாவில் ஏற்பட்ட சமூக பொருளாதார மாற்றங்கள் காரணமாக ஏற்பட்ட தாராண்மை வாதம் மற்றும் புரட்டஸ்தாந்து சீர்திருத்த அமைப்பு ஒருமித்தலுக்குப் பதிலாக குடிமகனை முதன்மையாகக் கருதுதல், அவ்வமைப்பின் இலச்சணமாகக் காணப்பட்டது.. "பூசாரிகள் மூலமாகவன்றி குடிமக்களை நேரடியாக கடவுளோடு தொடர்புபடுத்த முடியும்" என்ற புரட்டஸ்தாந்திய தனியாள் வாதக்கோட்பாடு அரசாட்சியில் வேரூண்டுவதற்கு வழிகாட்டலொன்றாக அமைந்தது.

# சனநாயகப் பாதையின் வரலாற்றுச் சிறப்புமிக்க விசேட சந்தர்ப்பங்கள்

**கி.பி 483-565** – உரோம ஜஸ்ரீனியன் என்ற பேரரசினால் சட்டத்தின் அதிகாரத்தை உறுதி செய்கின்ற சட்டம் தயாரிக்கப்படல்.

**1215- 6-15** – இங்கிலாந்தின் ஜோன் மன்னன் கையெழுத்திட்ட அதிகாரப் பத்திரம் (மெக்னா காட்டா கொள்கைப் பிரகடனம்) கைது செய்தல், சிறை வைத்தல் மன்னனின் தான்தோன்றித் தனமான அதிகாரத்தை அகற்றி பாராளுமன்றத்திற்கு அதிகாரத்தைக் கையளித்தல்.

**1265** – சைமன் டிமோன்பட் தலைமையில் இங்கிலாந்தில் முதற்தடவையாக முதலாவது பாராளுமன்றம் கூடுதல்.


**1679** – சட்டவிரோதமாக கைது செய்தல், தடுத்து வைத்தல் என்பவற்றை நீதிமன்றத்தின் முன் விசாரிக்கும் ஆட்கொணர் எழுத்தாணைச் சட்டம் (Heabeas Corpus) நிறைவேற்றப்படல்.

**1688** – இங்கிலாந்து மன்னனின் அதிகாரங்களை பாராளுமன்றத்திற்குக் கையளிக்கின்ற உரிமைச் சட்டம் நிறைவேற்றல்.

**1771** – அமெரிக்க பாரம்பரிய மக்கள் கிளர்ச்சி செய்து ஏற்படுத்திக் கொண்ட அமெரிக்க அரசியலமைப்பு (அனைத்து குடியேற்ற வாசிகளையும் குடிமக்களாகக் கருதுதல்.)

**1789** – பிரான்சின் சார் ஆட்சியை நீக்கி ஏற்படுத்திக் கொண்ட மக்கள் ஆட்சி மூலம் வெளியிடப்பட்ட பிரான்ஸ் சுதந்திரப் பிரகடனம். உலகில் முதற்தடவையாக பிரதிநிதித்துவ சனநாயகம் பிரான்ஸிலேயே ஆரம்பமாகியது.

**1832** – இங்கிலாந்தில் பாராளுமன்ற மறுசீரமைப்பு சட்டத்தின் மூலம் வாக்குரிமை விரிவுபடுத்தப்படல்.



விவசாயப் பொருளாதார முறைமைக்கு பதிலாக வர்த்தகம் மற்றும் தொழிநுட்பம் என்பவற்றை அடிப்படையாகக் கொண்ட புதிய முதலாளித்துவ பொருளாதார முறையொன்று தோற்றம் பெற்றதோடு, உரோமப் பேரரசு மற்றும் உரோம தேவாலயங்கள் வசம் காணப்பட்ட அரசியல் ஆதிக்கம் முதலாளித்துவப் பொருளாதார முறையின் வளர்ச்சிக்குத் தடையாகவிருத்தமையினால், முதலாளித்துவத்தினால் அதிலிருந்து விடுபட்டுக் கொள்வதற்காக இளவரசர்கள் மற்றும் பிராந்திய ஆட்சியார்களின் உதவி கோரப்பட்டது. இறையாண்மை முடியாட்சி முறைமைக்கு சார்பாக மேற்கத்தேய அரசியல் சிந்தனையாளர்களான மக்கியாவலி, ஹோபஸ், போடன் போன்றவர்கள் வாதங்களை முன்வைத்தனர். முதலாளித்துவ வர்க்கம் எதிர்பாரத்த தேசிய சுதந்திரம் மற்றும் உள்ளக அமைதி என்பன முடியாட்சியினால் மறுசீரமைக்கப்பட்ட போதும், 18,19 ஆம் நூற்றாண்டாகும் போது அவர்களின் பொருளாதார பலத்திற்கு அச்சுறுத்தலான அரசியல் அதிகாரமொன்றாக இந்த மன்னராட்சி முறைமை எழுச்சி பெற்றது. இதற்குத் தீர்வாகப் புதிய அரசியல் அதிகாரமொன்றை தேடிச் சென்ற முதலாளித்துவம் தமது கரங்களுக்கு அரசியல் அதிகார பலத்தை ஈட்டித் தந்த "குடியாட்சி வாதத்திற்கு" சார்புபட்டனர். முடியாட்சி முறைக்கு எதிராக குடியாட்சி முறையொன்றுக்காக மேற்கொண்ட போராட்டங்களின் ஊடாக சனநாயகம் தோற்றம் பெற்றதோடு தாராண்மை வாதமும் இதனோடு இணைந்ததாக தோற்றம் பெற்றதாக அரசியல் சிந்தனையாளரான "சர்டோப்" குறிப்பிட்டுள்ளார்..

# தாராண்மை வாதத்தின் பிரச்சினைகள்




18 ஆம் நூற்றாண்டின் இறுதி அரைப்பகுதியின் போது தாராண்மைவாத அரசாட்சி முறைக்கு அரசியல் சவால்களுக்கும் மற்றும் அச்சுறுத்தல்களுக்கும் முகம்கொடுக்க நேரிட்டது. சட்டத்தின் முன் சமத்துவம் மற்றும் சிவில், அரசியல் உரிமைகள், கடுமையான சுரண்டல்களுக்கு உட்பட்டிருந்த தொழிலாளர் வகுப்பு மற்றும் சிறிய நடுத்தர வகுப்பு மக்கள் ஆகியோருக்கு எவ்விதமான நன்மையும் இல்லையென்பது தெளிவாகியது. சட்டத்தின் முன் சமத்துவம் மற்றும் அதன் பாதுகாப்பு என்பன பணக்காரர்களுக்கு மாத்திரமே கிடைக்கின்றமை தெரியவந்தது, தாராண்மைவாத சனநாயகத்தின் மூலம் அத்தாட்சிப்படுத்தப்பட்ட சனநாயக உரிமைகளை அனுபவிப்பது பணக்கார வகுப்பினர் என்பதால் அந்த அரசை வீழ்த்தி அதன் அதிகாரத்தை தொழிலாளர் வர்க்கத்தினர் பிடித்துக் கொள்ளவேண்டுமென சமதர்மவாதிகள் தெரிவித்தனர். இந்த சிந்தனையில் கால்மார்க்ஸ் போன்ற அரசியல் சிந்தனையாளர்கள் முன்னணி வகித்தனர். அவர்கள் சனநாயகதத்தை எதிர்க்கவில்லை என்பதோடு, அதனை முன்னெடுத்துச் சென்று "முழுமையான சனநாயக சமூகமொன்றை" உருவாக்குவது அவர்களின் நோக்கமென்பது தெரிகின்றது. மேற்கத்தேய நாடுகளில் சுதந்திரமான தேர்தல்கள் காணப்பட்டபோதும், எல்லா சந்தர்ப்பங்களிலும் முதலாளித்துவ வகுப்பினரே ஆட்சிக்கு வந்திருப்பதாக சுட்டிக்காட்டிய அவர்கள், பொருளாதார சமத்துவத்தை அத்தாட்சிப்படுத்தாமல் சட்டத்தின் மூலம் அத்தாட்சிப்படுத்துகின்ற உரிமைகளால் மாத்திரம் மக்களின் சனநாயக உரிமைகளைப் பாதுகாக்க முடியாதென சுட்டிக்காட்டினர்.

பிரித்தானிய அரசியல் சிந்தனையாளரான ஹெரல்ட் லெஸ்கி "அரசு ஆதனங்களை நிருவகிக்க வேண்டும், இல்லாவிடின் ஆதனங்கள் அரசை நிருவகிக்கும்"எனத் தெரிவித்துள்ளார்.










## சனநாயக முறைமையொன்றின் வெற்றிக்கு தேவையான இலட்சணங்கள் என இனம் காணப்பட்டுள்ள விடயங்கள்

1. சிறுபான்மையினருக்கு பாதிப்பொன்று ஏற்படாத மற்றும் அவர்களின் உரிமைகள் மீறப்படாத பெரும்பான்மை நிருவாகம்
2. கலந்துரையாடல் மூலம் தீர்மானங்களுக்கு வருதல், எதிர்கருத்துக்களை சகித்துக்கொள்ளல் மற்றும் உடன்பாடுகளுக்கு வருதல்
3. சட்டவாக்கத் துறை, நிறைவேற்றுத் துறை மற்றும் நீதிமன்றம் என்றவாறு வேறாக்கப்பட்ட சுதந்திர அதிகாரங்கள் தனித்தனியாகக் காணப்படல்.
4. சட்டவாக்கபூர்வமான நிருவாகத்தை மதித்தல்
5. சட்டத்தின் முன் சமத்துவம் ஹெரல்ட் லஸ்கி மேலும் இந்த இலட்சணங்களை விரிவுபடுத்தி பின்வரும் இலட்சணங்களையும் உள்ளடக்கியுள்ளார்.
6. அரசின் பணிகள் தொடர்பாக விழிப்புடன் இருக்கும் மக்கள் கூட்டம்
7. அரசின் அனைத்து மக்கள் பிரிவினரையும் அதிகாரத்திற்கு வரும் ஆட்சியாளர்கள் ஒரே மாதிரியாக மதித்தல்
8. மாற்றுக் கருத்துக்களுக்கு மதிப்பளிக்கும் பழக்கம் சமூகத்தில் காணப்படல்
9. தேசிய ஒருமைப்பாட்டை ஏற்படுத்திக்கொள்ள முடிதல்.

## தனியாள் சுதந்திரம் சனநாயக முறைமையொன்றில் முதன்மை பெறுவதோடு, அவையாவன

- **தனியாள் சுதந்திரம்** – பேசும், சிந்திக்கும் மற்றும் கருத்துத் தெரிவிக்கும் பேச்சுச் சுதந்திரம்.
- **அரசியல் சுதந்திரம்** – வாக்களித்தல், வேட்பாளராகப் போட்டியிடுதல், ஆட்சி அதிகாரத்தை சட்டரீதியாகப் பெற்றுக் கொள்வதற்குள்ள சுதந்திரம், அரசியல் கட்சியொன்றைத் தாபித்தல், அவற்றில் இணைந்து செயற்படக்கூடிய சுதந்திரம்.
- **பொருளாதார சுதந்திரம்** – தொழிலொன்றில் ஈடுபடுவதற்கான சுதந்திரம், தொழிற் சங்கமொன்றில் இணைந்து கொள்ளல், நியாயமாக பணம் சம்பாதித்தல், சேமித்தல், சொத்துக்களை அனுபவித்தல், பாதுகாப்பு பெறுதல், உணவு ,வீடு, சுகாதார வசதிகளைப் பெற்றுக் கொள்ளல்.
- **கலாச்சார சுதந்திரம்** – விரும்பிய ஒரு மொழியைப் பேசுதல், விரும்பிய ஒரு சமயத்தைப் பின்பற்றுதல், விரும்பிய திருமண சம்பிரதாயங்கள் மற்றும் இதர பழக்க வழக்கங்களைப் பின்பற்றுதல் , விரும்பியவாறு கல்வி கற்றல்

## பிரதிநிதித்துவ சனநாயகம்

ஒரு நாட்டின் நிலப்பகுதி விரிவடையும் போதும் சனத்தொகை வளர்ச்சியடையும் போதும் நேரடியான பங்கேற்பொன்றைச் செய்ய முடியாது போகும். அதற்காக தமது விருப்பங்கள், நோக்கங்களை பிரதிநிதித்துவம் செய்வதற்காக பிரதிநிதிகள் மூலம் ஆட்சியில் பங்குகொள்வதற்கு நேரிடும். சனநாயகத்தை நடைமுறைச் சாத்தியமான ஒன்றாக மாற்றியது பிரதிநிதித்துவ சனநாயகமாகும். அது வெற்றியடைவதற்கு "சமமான வாக்கு" மற்றும் "பயனுடைய பங்கேற்பு" அவசியமாகும். பிரதிநிதித்துவ சனநாயகத்தின் வெளிப்பாடு, ஆயுதம் மற்றும் பலம் வாக்காகும். அரசியல் சனநாயகத்தின் உயிர்நாடி சுதந்திரமான மற்றும் நீதியான தேர்தல்களின் மூலம் ஏற்படுத்திக் கொள்ளப்படுகின்ற மக்களாட்சியாகும். அவ்வாறான மக்களாட்சியில் மேலும் காணப்படும் சனநாயக இயல்புகளாவன,

## சர்வசன வாக்குரிமை ஊடாக அரசையும் மற்றும் ஆட்சியாளர்களையும் தேர்ந்தெடுத்துக் கொள்ளல்

போட்டித்தன்மையுள்ள கட்சி முறைமை – எதிர்கருத்துக்களை பிரதிநிதித்துவம் செய்வதற்கு சந்தர்ப்பம் காணப்படல், பாதிப்பான செயற்பாடுகளை விமர்சிப்பதற்கு மற்றும் தான்தோன்றித்தனமான செயல்களை தடுப்பதற்கு, இதற்காக ஆளும் கட்சி போன்றே பலமிக்க எதிர்கட்சியொன்றும் இருத்தல் வேண்டும்.

வாக்கெடுப்பு மாவட்ட முறைமை – அனைத்து இனப் பிரிவுகளும் கருத்துக்கள் பிரதிநிதித்தும் செய்யப்படல், பிரதேச மட்டத்தில் அதிக பிரதிநிதித்துவம்.

நீதியான மற்றும் சுதந்திரமான தேர்தல் முறைமை – உரிய காலப்பகுதியினுள் தேர்தல்களை நடாத்துதல், தமது விருப்பங்களுக்கமைய பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுத்தல், வேட்பாளரொருவராக மற்றும் வாக்காளரொருவராக செயற்படுதல். சமத்துவம் மற்றும் சுதந்திரம் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு பொதுசன செயற்பாடுகளில் ஈடுபடுதல்

அரசியலமைப்புக்கு இசைவாக பணியாற்றுதல் – முறையானதாகவும் மற்றும் நிலையானதாவும், வெளிப்படைத்தன்மை கொண்டதாகவும் செயற்பாடுகள் காணப்படல்

ஊடக சுதந்திரம் மற்றும் தகவலகளைப் பெற்றுக் கொள்ளும் சுதந்திரம் – அறிவை விருத்தி செய்தல், சரியான தீர்மானங்களுக்கு வரக்கூடிதாக இருத்தல்.

நீதிமன்ற சுதந்திரம் – சட்டத்திற்கு முரணான அல்லது அநியாயமான செயற்பாடுகளிலிருந்து பாதுகாப்பு கிடைக்கப்பெறல், சட்ட அதிகாரம் மற்றும் சட்டத்தின் முன் சமத்துவம்.

"பிரதிநிதித்துவ அரசியலமைப்பு" என்ற நூலில் ஜோன் ஸ்டுவட் பிலி குறிப்பிடும் போது, சனநாயக முறைமையொன்றின் முக்கியமான இயல்பு பொதுமக்களுக்கு அரசின் தன்னாட்சி அதிகாரத்தில் பங்குதாரரொருவராக உட்படுவதற்குள்ள சாத்தியப்பாடுகள் நாட்டின் ஆட்சிப் பணிகளில் பங்குகொள்வதற்குள்ள சாத்தியப்பாடுகளாகும் எனக் குறிப்பிட்டுள்ளார்.

## முடிவுரை

சனநாயகத்தின் பிரதான நோக்கம் அனைத்துப் நபர்களையும் வளர்ச்சி பெறச் செய்வதாகும். நபர்கள் அனைவரையும் ஒன்றாக எடுக்கும் போது "பொது மக்கள்" எனப்படும். அதன் காரணமாக பொதுக்கள் பொதுமக்களை ஆட்சி செய்ய வேண்டும். அது மன்னன், சர்வாதிகாரி, பிரபு, இராணுவம், ஆட்சிக்குழு அல்லது சர்வாதிகார அரசியல் கட்சியொன்று செய்கின்ற ஆட்சியாக இருத்தல் கூடாது. அங்கு மிக முக்கியமாக அமைவது சிறுபான்மை மக்களின் அடிப்படை உரிமைகள் மீறப்படாத பெரும்பான்மை ஆட்சியாகும். சிறுபான்மை மக்களின் அடிப்படை உரிமைகள் மீறப்படுகின்ற ஆட்சிமுறைமைக்கு சனநாயகத் தூய்மைத்தன்மை கிடைக்கமாட்டாது. மனிதனின் இயற்கை உரிமைகள் அதாவது, வாழ்தல், சுதந்திரம் மற்றும் இன்பமடையும் உரிமையை பாதுகாப்பது சனநாயக ஆட்சியின் குறிக்கோளாகவிருத்தல் வேண்டும்.

நிறுவன அடிப்படையில் எவ்வளவு நல்ல சனநாயக ஏற்பாடுகளை எந்தவோர் அட்சி முறையொன்றினுள் உள்ளடக்கிய போதும், மக்கள் அது பற்றி அறிந்திருக்கவில்லையெனில் மற்றும் மக்கள் அவற்றில் உயிர்ப்புடன் கலந்து கொள்வதை நிராகரிப்பார்களாயின் அதன் மூலம் பெற்றுக் கொள்ளக்கூடிய பயன் மிகவும் குறைவானதாகும். நடைமுறைச்சாத்தியமான அரசியலினுள் சனநாயகத்தை மலரச் செய்ய முடிவது அந்த ஆட்சிமுறையில் நடைமுறைப்படுத்துகின்ற சமூக மற்றும் பொருளாதார நிலைமைகளின் அபிவிருத்தி மற்றும் வளர்ச்சி என்பவற்றின் அடிப்படையில் என அரசியல் விமர்சகர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

– சட்டத்தரணி நிமல் புஞ்சிஹேவா












# பளிங்குச் சுவர்

## Democracy

The term democracy is derived from 'demos' and 'cratia' which respectively mean people and power; thus democracy means "power in the hands of the people."

Definition: Democracy is a form of government where sovereignty belongs to the people; the government is representative of and responsible to them; the purpose of the state is welfare of the people which includes the development of personalities of the citizens.

It is thus not only a form of government but a type of state as well as an order of society. According to Bryce, "democracy is that form of government in which the ruling power is vested not in any individual, or in a particular class or classes but in the members of community as a whole".

Dicey calls it "a form of government in which the governing body is comparatively a large fraction of the entire nation". Lincoln gave the historic definition of democracy as "government of the people, for the people, and by the people". Seeley defines democracy as a "government in which everybody has a share". According to Bassett, Democracy is essentially a matter of political method. Democracy is not a particular kind of civilization. It is rather a civilized way of taking political action. Democracy reconciles freedom with the need for law and its enforcement.

It may be defined as "political method by which every citizen has the opportunity of participating through discussion in an attempt to reach voluntary agreements as to what shall be done for the good of the community as a whole." In fact democracy is not only a form of government, it is also a way of life.

**- Sreen Yapa Boralessa**
(sources-http://www.preservearticles.com)

மலைநாட்டின் குளிர்மிகு நுவரெலியாவில்
லயன் அறைகளிலிருந்து எழுந்து வருகின்ற ஒலியில்
தேயிலைக் கொழுந்துகளின் எதிரொலிகள்
முழங்க வேண்டும், உரிய இடங்களில்..

கடற்கரைகளில் அலைகளின் ஓசையுடன்
ஒன்றாகி ஒலிக்கின்ற மீனவர்  நாதங்கள்
கடற்குருவிகள் பறந்து செல்லும்
வடிவில் தோன்ற வேண்டும், உரிய இடங்களில்.

நாளைய உலகிற்கு வழிகாட்டும் விஞ்ஞானக் கண்கள்
காணும் கனவிலே பொதிந்துள்ள அழகு
நனவாகும் அதியசயங்கள்
நிகழ வேண்டும். உரிய இடங்களில்.

அந்த உரிய இடம் இல்லை அவ்விடங்களில்
அதனை நாம் உள்ளத்தால் ஒன்றிணைந்து
தேடிச் செல்ல வேண்டியது, நானும் நீயுமன்றி
வேறு எவருமல்ல..

உன் குரல் கொண்டு குரல் கொடுக்க
உன் கண்ணீரில் மனம் நெகிழும்
உரிய நபர்களை தேடிச் செல்ல முடிவது
உனக்கன்றி வேறுயாருக்கு?

உன் நாமத்தால் ஒரு மனிதனைச் தேடிச் செல்லும்
அந்தப் பயணத்தில்
சனநாயகம்
உனக்கு, உன்னையும் உன் பிள்ளைகளையும் பற்றி
சிந்திப்பதற்குள்ள ஒரே வழியாகும்
சனநாயகம் ..
உரிய இடத்தில், சரியாக நிலைபெறும்
தினமொன்றில் உன் வாழ்வும் வளமடையும்........

– லீலநாத் விக்கிரமஆரச்சி







# நவீன சனநாயகத்தின் தோற்றுவாய் கூட்டுறவு அமைப்பாகும்

சரசனவாக்குரிமை முறைமை தற்போது உலகம் பூராகவும் வியாபித்து விட்டது. தமது ஆட்சியாளர்களை இந்த முறைமைக்கப்பால் தேர்ந்தெடுக்கின்ற நாடுகள் உலகில் மிகவும் குறைவாகவே உள்ளன.

இருப்பினும், சனநாயக முறையில் தமது ஆட்சியாளர்கள் முதன்முதலாக கூட்டுறவு அமைப்பிலேயே தேர்ந்தெடுக்கப்பட்டார்கள் என்பது உங்களுக்குத் தெரியுமா?

1844 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 21 ஆம் திகதி உலகில் முதலாவது கூட்டுறவுச் சங்கம் என்ற வர்த்தக நிறுவனம் தோற்றம் பெற்றது. வேறு அமைப்புக்களை விடவும் வேறுபட்ட விதத்திலாகும். குறைந்த வருமானம் பெறுகின்ற 28 நபர்கள் கூட்டுச் சேர்ந்து சமமான பங்குகளை இட்டு ஆரம்பிக்கப்பட்ட அந்த அமைப்பு **The Rochdale Socity of Equitable Pionees** என அழைக்கப்பட்டது. இந்த அமைப்பை ஆரம்பித்தவர்கள் ரொச்டேல் முன்னோடிகள் என அழைக்கப்படுகின்றனர்.

ரொச்டேல் முன்னோடிகள் தமது சங்கத்திற்கு அப்போதைய நடைமுறைக்கேற்ப அவர்களுக்குத் தெரிந்த விதத்தில் யாப்பொன்றை உருவாக்கினர். அவை ரொச்டேல் கோட்பாடுகள் என அழைக்கப்படுகின்றது.

அவர்களின் கோட்பாடுகளின் எண்ணிக்கை எட்டு ஆகும். அங்கத்தவர்களை சேர்த்தல், நிருவாகம் மற்றும் வர்த்தக அலுவல்களை வழிநடாத்தல் போன்ற விடயங்கள் இந்த எட்டுக் கோட்பாடுகளில் சுருக்கமாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அதில் முதலாவது "சனநாயக நிருவாகம்" என்பதோடு இரண்டாவதாக "திறந்த அங்கத்துவம்" எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

தற்போது சனநாயகம் என்பது நிச்சயமான பொருள்கோடலொன்று இல்லாத எண்ணக்கருவாகும். இருப்பினும் ரொச்டேல் முன்னோடிகள் அதனை தமது யாப்பில் அல்லது சமகால பயன்பாட்டின் அடிப்படையில் குறிப்பிடுவதாயின் இலக்குகளுக்குள் உட்சேர்த்திருந்தனர்.

அங்கத்துவம் திறந்த அடிப்படையானது, ஆண் பெண் பால் நிலை, குலம் கோத்திரம், சொத்து என்பன அங்கத்துவம் வழங்கும் போது கருத்திற் கொள்ளப்படவில்லை. பங்குகளை எவ்வளவுதான் கொள்வனவு செய்திருந்த போதிலும் அலுவலர் தெரிவின் போது ஒரு நபருக்கு ஒரு வாக்கு மாத்திரமே உரித்தாகும்.

இதுதான் நவீன சனநாயகத்தின் தோற்றுவாய் ஆகும். பின்னர் உலகம் முழுவதும் விருத்தி அடைந்து பரவிய கூட்டுறவுச் சங்கங்கள் தமது நிருவாகிகளைத் தேர்ந்தெடுத்துக் கொள்வதற்கு அன்று கையாண்டது இந்த ஒழுங்குமுறையையாகும்.

– எஸ். நந்தலால்

















## ஆலோசனைக் குழு

மஹிந்த தேசப்பிரிய
சனாதிபதி சட்டத்தரணி நளின் ஜே. அபேசேகர
பேராசிரியர் இரத்தின ஜுவன் எச். ஹூல்
ஆர். எம். ஏ. எல். ரத்நாயக்க
எச். எம். ரீ. ரீ. ஹேரத்
சமன் ஸ்ரீ ரத்நாயக்க

தொகுப்பு – சன்ன பீ. த. சில்வா
தொகுப்பு உதவி – ஒசானி பீரிஸ், அமில பிரசாத்
அச்சிடல் ஆலோசனை – கே. டப். ஜகத் சந்திரலால் த சில்வா, இலங்கை முதலீட்டுச் சபை
அச்சுப் பதிப்பு – அரசாங்க அச்சகம்
வெளியீடு – ஆராய்ச்சி மற்றும் திட்டமிடல் பிரிவு, தேர்தல் ஆணைக்குழு



## உங்கள் கருத்துக்களையும் முன்மொழிவுகளையும் எமக்கு எழுதுங்கள்

தொகுப்பாசிரியர் – புள்ளடியின் பலம்
தேர்தல் ஆணைக்குழு,
தேர்தல்கள் செயலகம்,
02, சரண மாவத்தை
இராஜகிரிய
இலங்கை.

(+94)0112868441-42-43
(+94)112868426
info@elections.gov.lk
www.elections.gov.lk
SriLankaElectionCommission
elecomsl




Designed by Chanaka Kumanayaka